FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319498

1. District : Salem PS: V2 AC Year: 2025 FIR No.: 21/AC/2025 Date: 19.12.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: as amended in 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.12.2025 Date to : About 11.25 Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 18.12.2025 Time : 15.45 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 19.12.2025 Time : 08.30 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed Complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 18 km North West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Puthu Mariamman kovil street, Chinna Adaikanur. Kottaimedupatti. Omalur. Salem Dt.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt.S.Suganya (b) Father's/ Husband's Name : Sethu
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age 32 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Self Employment (g) Address : No.5/305, Puthu Mariamman kovil Street Chinna Adaikanur. Kottaimedupatti, Omalur. Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Ilayaraja, Commercial Assistant, TNIPDCL, Vellalapatti Unit Office, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Details enclosed in Seperate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/12/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19/12/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.12.2025 at
09.45 Hrs

Name: பெயர் M. Nallammal
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police.
V2 AC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 18.12.2025-ம் தேதி மாலை சுமார் 15.45 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.நல்லம்மாள் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருமதி. S.சுகன்யா, D/o. சேட்டு, க.எண்.5/305, புதுமாரியம்மன் கோவில் தெரு, சின்ன அடைக்கனூர், கோட்டைமேட்டுப்பட்டி, ஓமலூர், சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் S.சுகன்யா, D/o. சேட்டு, க.எண்.5/305, புதுமாரியம்மன் கோவில் தெரு, சின்ன அடைக்கனூர், கோட்டைமேட்டுப்பட்டி, ஓமலூர், சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம் மாவட்டம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது கணவர் விஜயராகவன், share market தொழில் செய்து வருகிறார். நான் B.A. வரை படித்துள்ளேன். சொந்தமாக தையல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2021-ம் வருடம் மேற்கண்ட முகவரியில் எனது பெயரில் பிளாட் வாங்கி 2023-ம் வருடம் வீடு கட்டி முடித்து குடிவந்தோம். இதுநாள் வரை வீட்டிற்கு சோலார் பேனல் அமைத்து மின்சாரம் பயன்படுத்தி வருகிறோம். வீட்டிற்கு மின் இணைப்பு பெறலாம் என்று கடந்த 20.11.2025-ம் தேதி வீட்டு மின் இணைப்பு கேட்டு எனது பெயரில் எங்கள் பகுதிக்கான வெள்ளாளப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்திற்கான Reference No.200044591125840 ஆகும். அதற்கு ரூ.5,575/- கட்டணமாக ஆன்லைன் மூலம் செலுத்தினேன். அதன் பின்னர் வெள்ளாளப்பட்டி மின்வாரிய அலுவலகத்தில் இருந்து AE, CA மற்றும் Line man ஆகியோர் எங்களது வீட்டை வந்து பார்வையிட்டு கம்பம் போடுவதற்கு அளவீடு செய்துகொண்டு எஸ்டிமேட் போட்டுவிட்டு சொல்கிறோம் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். அப்போது CA இளையராஜா நான்தான் எஸ்டிமேட் போடுவேன் என்று சொல்லிவிட்டு சென்றார். ஆகையால் நான் CA இளையராஜா செல்போன் எண்.8072890751-ல் போன் செய்து எங்களது மின் இணைப்பு குறித்துகேட்டுவந்தேன். அவர் எனது விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை அலுவலகத்தில் கொண்டுவந்து கொடுக்கசொன்னார். அதனால் கடந்த 08.12.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு வெள்ளாளப்பட்டி

மின்வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று எனது மின் இணைப்பு சம்பந்தமான ஆவணங்களை CA இளையராஜா அவர்களிடம் கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் எஸ்டிமேட் போட்டுவிட்டு சொல்கிறேன், ஆபீஸ் பார்மாலிட்டியும், டெபாசிட் தொகையும் சேர்த்து உங்களுக்கு மொத்தம் ரூ.45,000/-வரை செலவாகும் என்று சொன்னார். அதன் பின்னர் நான் அவரை போனில் தொடர்பு கொண்டபோதெல்லாம் ஆபீஸ் பார்மாலிட்டி இருக்கு அத கொடுத்தீங்கனா எஸ்டிமேட் ரெடி ஆகிவிடும் என்று சொன்னார். நான் 17.12.2025-ம் தேதி காலை CA இளையராஜா அவர்களுக்கு போன் செய்து எஸ்டிமேட் சேங்சன் ஆக ஆபீஸ் பார்மாலிட்டி என்னங்க சார் என்று கேட்டேன் அதற்கு போனில் வேண்டாம், நேரில் வீட்டிற்கு வருவதாக தெரிவித்தார். பின்னர் 17.12.2025-ம் தேதி காலை சுமார் 11.25 மணிக்கு எங்க வீட்டிற்கு திரு.இளையராஜா அவர்கள் Line man அவர்களுடன் நேரில் வந்தார். அப்போது CA இளையராஜா என்னிடம் எங்கள் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க இன்னும் ஒரு கம்பம் போடவேண்டும், அதற்கு ஸ்டே கம்பம் ஒன்றும் போடவேண்டும். அதற்கு டெபாசிட் ரூ.33,000/-ல் இருந்து ரூ.35,000/- வரை கட்டவேண்டியது வரும் என்றும் அது எஸ்டிமேட் sanction ஆனவுடன்தான் தெரியும் என்றும், ஆபீஸ் பார்மாலிட்டியா எனக்கு ரூ.8,000/- கொடுத்திடுங்க அப்போதுதான் உங்களுக்கு எஸ்டிமேட் sanction ஆகும், எஸ்டிமேட் OK ஆன பின்னாடி பீஸ் கட்டிடுங்க. அதற்கு நான் முன்கூட்டியே ஆபிசுக்கு தனியா ரூ.8,000/- கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு CA இளையராஜா, அது கட்டவேண்டிய பணம் இல்லை, தனியாக கொடுக்கிறது, அந்த 8,000/- ரூபாய்க்கு bill எதுவும் வராது. மேற்கொண்டு கம்பம் நடும் போதும் செலவுக்கு கொடுக்கவேண்டியது இருக்கும் என்றும் சொன்னார். நீங்க ரூ.8,000/-ஐ சீக்கரமா ஏற்பாடு பண்ணிட்டு வந்து என்னை பாருங்க என்று சொன்னார். எனக்கு எனது வீட்டு மின் இணைப்பு பெறுவதற்கான எஸ்டிமேட் தயார் செய்ய வெள்ளாளப்பட்டி EB அலுவலகத்தில் Commercial Assistant ஆக பணிபுரியும் இளையராஜா அவர்களுக்கு லஞ்சமாக ரூ.8,000/- கொடுக்க விருப்பமில்லை. அவர் லஞ்சமாக கேட்ட ரூ.8,000/- பணத்தை தயார் செய்து வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட CA இளையராஜா மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (S.சுகன்யா) 18/12/25) Sir, Received the above computer typed complaint on 18.12.2025 at about 15.45 Hrs. Sd xxxx (M.Nallammal) 18/12/2025, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.21/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 19.12.2025 at 08.30 hrs. Sd xxxx (M.Nallammal) 19/12/2025, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

19/12/2025

(M.நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.